6272

5629

<u>பதிவஞ்சல் ஒப்புகை அட்டையுடன்</u>

**மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள், இயக்குநர், சென்னை–6 அவர்களின்**
**செயல்முறை ஆணை**
**முன்னிலை: மரு.எஸ்.குருநாதன், எம்எஸ்., (ஜிஎஸ்),**

<u>ந.க.எண். 10418/நிபி8/1/2021</u> நாள்: 24.06.2021

பொருள்: தமிழ்நாடு அமைச்சுப்பணிகள் – கருணை அடிப்படையில் பணி நியமனம் - திரு.சு.சிவகுமார், (த/பெ.(அமரர்) திரு.பி. சுப்ரமணியன், சமையலர், அரசு மருத்துவமனை, மேட்டுப்பாளையம், கோவை மாவட்டம்) – கருணையடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளர் பணியமர்த்தப்பட்டது - பணி வரன்முறை – ஆணை வழங்குதல் - தொடர்பாக

பார்வை:
1) அரசாணை (நிலை) எண்.560, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் : 03.08.1977 மற்றும் அதன் தொடர்புடைய ஆணைகள்.
2) அரசாணை (நிலை) எண்.120, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 26.06.1995.
3) அரசாணை (நிலை) எண்.42, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 12.03.2007.
4) அரசாணை (நிலை) எண்.202, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 08.10.2007.
5) அரசாணை (நிலை) எண்.48, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் : 26.02.2021.
6) அரசு கடித எண்.8755/ஏடி2/2021–1, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (ஏடி2) துறை, நாள் : 16.03.2021.
7) இவ்வியக்கக கூடுதல் இயக்குநர் (நிர்வாகம்) அவர்களின் பணிநியமன ஆணை ந.க.எண்.55608/நிபி8/1/2019, நாள் : 23.09.2019.
8) இவ்வலுவலக பணியமர்த்தல் ஆணை ந.க.எண்.59251/நிபி2/2/2019, நாள் 30.09.2019.
9) கோவை மாவட்ட இணை இயக்குநர் நலப்பணிகள் கடித ந.க.எண்.598/நிபி2/2/2021, நாள் : 03.02.2021.

*****

<u>**ஆணை:**</u>

கோவை மாவட்டம், மேட்டுப்பாளையம், அரசு மருத்துவமனையில் சமையலராகப் பணிபுரிந்து பணியிலிருக்கும் போதே காலமான திரு.பி. சுப்ரமணியன் என்பவர் 16.02.1987 முற்பகல் பணி வரன்முறைப்படுத்தப்பட்டு, 15.02.1988 தகுதிகாண்பருவம் முடித்துள்ளார். அவரின் பிறந்த தேதி 15.08.1950, அவர் ஒய்வு பெற வேண்டிய நாள் 30.08.2010 ஆகும். இறந்த அரசு ஊழியரின் வாரிசுதாரராகிய அவரது மகன் திரு.சு.சிவகுமார் என்பவர் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பணிவேண்டி உரிய காலக்கெடுவுக்குள் உரிய ஆவணங்களுடன் விண்ணப்பித்திருந்தார்.

பார்வையில் கண்டுள்ள அரசாணைகள் மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் விதி (பணி நிபந்தனைகள்) பிரிவு 17(1) 2016 (தமிழ்நாடு சட்டம் 24/2016)–ன்படி, கோவை மாவட்டம், மேட்டுப்பாளையம், அரசு மருத்துவமனையில் சமையலராகப் பணிபுரிந்து பணியிடையே 04.07.2004 அன்று இயற்கையெய்திய திரு.பி.சுப்ரமணியன் மகனும் வாரிசுதாரருமாகிய திரு.சு.சிவகுமார் (பிறந்த தேதி 30.05.1975) தமிழ்நாடு அமைச்சுப்பணியின் கீழ் கருணைபடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளராக ரூ.19500–62000/– நிலை 8 (Level 8) என்ற சம்பள முறையில் பணி நியமனம் செய்யப்பட்டு, கோவை மாவட்ட நலப்பணிகள் இணை இயக்குநர் அலுவலகத்தில் 04.10.2019 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகிறார்.

எனவே, கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்ட திரு.சு.சிவகுமார் என்பவரின் தற்காலிக இளநிலை உதவியாளர் பணியினை பார்வை–5இல் காணும் அரசாணையின்படி அவர் பணியில் இணைந்த நாளான 04.10.2019 முற்பகல் முதல் அவர் அப்பணிக்குத் தேவையான உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு அன்னாரின் தற்காலிக பணியினை, பணிவரன்முறை செய்து ஆணை வெளியிடப்படுகிறது. இவ்வாணை வெளியிடப்படுவதன் மூலம் தனியர் ஆண்டு ஊதிய உயர்வுகள் / ஊதிய நிலுவை இருப்பின் அதைப்பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

எஸ்.குருநாதன்,<br>
மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள்<br>
இயக்குநர்

பெறுநர்<br>
திரு.சு.சிவகுமார்,<br>
இளநிலை உதவியாளர்,<br>
இணை இயக்குநர் நலப்பணிகள், கோவை.<br>
— இணை இயக்குநர் நலப்பணிகள், கோவை மூலமாக

நகல்<br>
இணை இயக்குநர் நலப்பணிகள், கோவை.<br>
நிர்வாகப் பிரிவு 2 (2 நகல்கள்)<br>
நிர்வாகப் பிரிவு 2 (முதுநிலை)<br>
இருப்புக் கோப்பு / உதிரி

// உண்மை நகல் // அனுப்பப்படுகிறது //

இணை இயக்குநர் (நிர்வாகம்)

Ref. No. 6657/E4/19

Copy communicated for information.

O/o Joint Director of Health Services<br>
209, Race Course Road,<br>
Coimbatore - 641 018.

dt: 14.09.21

ADMINISTRATIVE OFFICER<br>
FOR JOINT DIRECTOR OF HEALTH SERVICES<br>
COIMBATORE - 18<br>
D.O. CODE No: M.F. 206

To<br>
Thiru. S. Sivakumar, Junior Assistant<br>
o/o. JDHS, Coimbatore - Through office Superintendent.